# புலிகளின்றி இனப்பிரச்னைக்கு தீர்வுகாண முடியாது


விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 30 இதழ் 129
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13 - 6 - 1995


## லக்ஷ்மன் கதிர்காமர் பேட்டி

(லண்டன்)
விடுதலைப்புலிகள் ஒரு வலுவான சக்தியாக இருப்பதால் அவர்கள் கலந்து கொள்ளாமல் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண முடியாது என்று வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

(6ம் பக்கம் பார்க்க)

★ விடுதலைப் புலிகள்

## விமானங்களில் பறந்து கொழும்பைத் தாக்குவர்!

(கொழும்பு)
கொழும்பு நோக்கி விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையைச் சேர்ந்த இருவர் 'இலகுரக விமானங்களில் பறக்க எத்தனித்து வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இதையடுத்து கொழும்பில்

[2-ம் பக்கம் பார்க்க]

★ கிழக்கில் மீண்டும் புலிகள் தாக்குதல்

# கிரான் இராணுவ முகாம் தகர்ப்பு

# 18 படையினர் உயிரிழப்பு!

## - பல ஆயுதங்கள் மீட்பு -

(கொழும்பு)
மட்டக்களப்பு கிரானிலுள்ள இராணுவ முகாம் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் முகாம் முற்றாக அழிக்கப்பட்டதுடன் 18 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பல ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

(6ம் பக்கம் பார்க்க)

## மட்டு-அம்பாறைப் பகுதிகளில் பாரிய தேடுதலுக்கு ராணுவம் முஸ்தீபு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பாரிய தேடுதல் நடவடிக்கைக்காகக் கிழக்கில் படைகள் குவிக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கில் புலிகள் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளதால், காடுகளில் தேடுதல் வேட்டை நடத்தப் படையினர் திட்டமிட்டுள்ளனர்.

கிழக்கில் காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர். மட்

(2ம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவை விட புலிகள் புலனாய்வில் அதிக வளர்ச்சி!

[கொழும்பு]
சிறிலங்காவின் புலனாய்வை விட விடுதலைப் புலிகளின் புலனாய்வு துறை அதிக அளவில் வளர்ந்துள்ளது. என சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரச இராணுவ புலனாய்வு பிரிவுகளை விட விடுதலைப் புலிகளின் புலனாய்வு துறை அதிக அளவில் வளர்ந்துள்ளது.

சிறிலங்கா இராணுவ

[6ம் பக்கம் பார்க்க]

## மிகிந்தலையில் தீவிர பாதுகாப்பு ஐயாயிரம் பொலிஸார் குவிப்பு!

(கொழும்பு)
அனுராதபுரம் மிகிந்தலையில் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தைத்தொடர்ந்து அப்பகுதியில் தீவிரபாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மிகிந்தலை பௌத்த விகாரை திருவிழாவையொட்டி இப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கை

[2ம் பக்கம் பார்க்க]

## ஹிக்கடுவையில் கோர பஸ் விபத்து: ஆறு பேர் பலி; ஐம்பது பேர் காயம்!

(கொழும்பு)
ஹிக்கடுவ குமாரகத்த சந்தியில் இடம் பெற்ற பஸ்விபத்தில் ஆறு பேர் உயிரிழந்துள்ளார்கள் 55 பேர் காயமடைந்தார்கள்.

நேற்று அதிகாலை 2-00 மணிக்கு இடம் பெற்ற இந்த பஸ்விபத்தின் போது சாரதி மதுபோதையிலிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்கு சென்ற பஸ் வண்டி ஹிக்கடுவையில்

(2-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் 5 தமிழர்கள் படுகொலை!

(மட்டுநகர்)
மட்டக்களப்பில் ஐந்து அப்பாவித் தமிழர்கள் சிறிலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்,

கடந்த 8ம் திகதி மட்டு காயங்கேணியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்ஒருர் கண்டதுண்டமாக வெட்டப்

(2ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவடி ஓடை முகாம் படையினர் வாபஸ்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு காட்டுப்பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மாவடி ஒடை இராணுவ முகாமை மூடிவிட்டு வெளியேறியுள்ளனராம்.

காட்டுப் பகுதியில் நிலைகொண்டிருப்பதனால் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற

[6-ம் பக்கம் பார்க்க]

## ஏவுகணை எதிர்ப்பு ஹெலி கொள்வனவு

(கொழும்பு)
சிறிலங்கா அரசு ஏவுகணை எதிர்ப்பு ஹெலிகொப்டர்களை ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது.

இக்கொள்வனவிற்காக ஏற்கனவே நிபுணத்துவம் வாய்ந்த குழு ஒன்று ரஷ்யா சென்றுள்ளது. -ரி

## இந்திய அரசு தற்போது புலிகளுக்கு அஞ்சுகிறது

(கொழும்பு)
இந்திய அரசு தற்போது விடுதலைப்புலிகளுக்கு அஞ்சுகிறது இந்தியாவிலுள்ள பிரிவினை வாதிகளுக்கு புலிகள் ஆயுதங்கள், வெடிப்பொருட்களை ஏற்றுமதி செய்து விடுவார்கள் என்பதே இந்த அச்சத்துக்கு காரணமாகும். என்று திரு ஏ. சி. எஸ். ஹமீட் சண்டே லீடருக்கு தெரிவித்தார்.

இதேவேளை, இந்தியா திரு. பிரபாகரனை நாடுகடத்துமாறு இலங்கையை கேட்பது பற்றி. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் காரியதரிசி ருவ் ஹகீம் தெரிவிக்கையில் இது நடைமுறைக்கு சாத்தியமான விடயமல்ல எனினும் இந்த விடயம் உள்ளூரிலும் சர்வதேசத்திலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் விடயம் என்று குறிப்பிட்டுள்ளார். கே-ரி

## கிளாலி பூநகரி படகு சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகு சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளது. -ரி

## அந்தோனியார் திருவிழா

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய தேர்ப்பவனி இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறும்.

காலை 6-15 மணிக்கு யாழ். ஆயரினால் திருநாட் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் அதைத் தொடர்ந்து தேர்ப் பவனி இடம்பெறும். 170-ரி

## ஐ. ஐ. தே. மு புதிய கட்சியாக அங்கீகாரம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (அத்துலத்முதலி அணி) தேர்தல் ஆணையாளரால் புதிய கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இக் கட்சியின் தலைவராக பி. வி. ஜி. கலுகல்ல நியமிக்கப்பட்டுள்ளார். சிறிமானி அத்துலத் முதலியின் கீழ் இயங்கும் இக் கட்சி, பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் கட்சி ரீதியாக இணைந்து செயல்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது ம

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்.

**13–06–1995**

செவ்வாய் இரவு

- 08-02 ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- 08-10 அறிந்து கொள்ளுங்கள்
- 08-20 நலந்தானு- முதற்சிகிச்சையின் அவசியம்பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
- 08-30 செய்திகள்
- 08-40 கருத்துக்களம்
- 08-50 மலரும் மொட்டுக்கள்

**14 –06– 1995**

புதன காலை

- 07-02 மாவீர வணக்கம்
- 07-15 நீங்கள் கேட்டவை
- 07-30 செய்திகள்
- 07-35 பத்திரிகைச் செய்திகள்
- 07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**13–06-1995**

செவ்வாய் மாலை

- 05-00 சிந்தனைச் சிதறல்
- 05-02 எழுச்சி கீதம்
- 05-10 புதியன வ
- 05-15 தமிழினச
- 05-30 வானொலி மதியூகம்
- 06-00 சிந்தனைக்கு சிலவநாடிகள்
- 06-02 இவ்வாரம் இவர்
- 06-15 விளையாட்டுச் செய்திகள்
- 06-20 என் தெரிவு
- 06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## வீரவணக்கக் கூட்டம் நினைவுக்கல்நாட்டல்

(யாழ்ப்பாணம்)

கடந்த 02ம் திகதி திருமலை திரியாய் காட்டில் யான் ஓயாவில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை இளையவன் (அல்லிராசா சமலதாஸ் நவாலி தெற்கு மானிப்பாய்] அவர்களின் திருவுருவப்படம் இன்று பி-ப 1-00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்து செல்லப்பட்டு அவர் கல்வி கற்ற மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் கல்லூரி ஆசிரியமாணவர்களினதும் பொதுமக்களினதும் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு அங்கு பி-ப 2-00 மணியளவில் இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மரியாதைகளுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்படும், ரி

## ஜூன் மாத உலக உலா வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

ஜூன் மாத உலக உலாவில் பறக்கும் தட்டு உண்மையானதா? முற்றிலும் கட்டுக்கதையா? எனும் தொழில் நுட்பரீதியான புதிய தகவலுடனான விரிவான ஆய்வுக் கட்டுரை கணனியியலில் மகனேற்றிக் மெமறி டிவைஸ் சாதனங்களின் முக்கிய குறைபாடுகள் கணனி ஆவணப் பாதுகாப்பிற்கு பெரும் பிரச்சினையாக வளர்ந்துள்ளது' அன்ராட்டிக்காவிலிருந்து பிரிந்த மாபெரும் உறைபனிப்பாளம் ஒன்று உலகிற்கு துக்குறி காட்டுகின்றதா? பழஈ ஒன்றில் பதினான்கு பிரகாசமான கண்களை தோற்றுவித்த விஞ்ஞானி, பிரபஞ்சத்தின் ஆரம்பததைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை.

சமநிலையைப்பேணி நிலைபெறச்செய்ய பரபஞ்சத்தில் பொருளாற்றல் நிறை: ஈர்ப்புச்சக்தி; என்பன தேவை என உறபில் ஆராய்வு இன்ரர் நெற்றினை உடைத்த கணனித் திருடன் அகப்பட்டான். அமெரிக்கர்களையே அசகுறுத்தும் ஒக்லஹோமா குண்டு வெடிப்பு கின்னஸ் தொடரில விலங்கினம் தொட்டு டொல்பின்கள் ஆடு. மாடு போன்ற எல்லாம் ஒரே மூதாதையரின் வழித்தோற்றம் என்ற ஆய்வுக் கட்டுரை மற்றும் ஆப்கானிஸ்தானில் தலிபானின் வீழ்ச்சி மடித்துப் பெட்டியில் வைக்கக்கூடிய மிதிவண்டி கடல் அரிப்பை தடுக்கும் செயற்கை சாதனம் போன்ற புதியன அறிமுகமாகவும் இன்றும் உலக விவகாரங்கள் என பற்பல புதிய நல்ல செய்திகளையும் தாங்கி இம்மாத ''உலக உலா'' வெளிவந்துள்ளது. ரி

## மட்டு மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார்.

3ம் திகதி மகிழடித்தீவில் வைத்து கைது செய்யப்பட்ட தமிழ்மகன் ஒருவர் அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேதினம் ஏறுவூரில் பொலிஸாரால் இதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரன் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த 29ம் திகதி காஞ்சிரங்குடாவில் இருதமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். -ரி

## விடுதலைப் புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசுத் தலைவர்களினதும் அரசியல்வாதிகளினதும் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலகுரக விமானங்களில் வந்து கொழும்பில் முக்கியஸ்தர்களை தாகக புலிகள் திட்டமிட்டிருப்பதால் அரசுத்தலைவர்களுக்கும் அரசியல்வாதிகளுக்குமிடையில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி-ரி

## ஹிக்கடுவையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது.

சாரதி பஸ்வண்டியை மிக வேகமாக ஓட்டியதாகவும் கட்டுப்படுத்த முடியாமல் இந்தவிபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை துல்கிரியவில் இடம் பெற்ற லொறி வான் விபத்தில் லொறி உரிமையாளரும் சாரதியும் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. ர-க-ரி

## மிகிந்தலையில்

[1ம் பக்கத்தொடர்ச்சி]

களுக்காக மிகிந்தலையில் நேற்றுஐயாயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டனர். இவர்களுடன் இராணுவத்தினரும இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தினால் வழமையாக மிகிந்தலை திருவிழாவுக்கு வரும் சிங்களவர்கள் இவ்வருடம் வருகை தரவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் சிலாலங்கார என்ற பௌத்த தேரர் கொல்லப்பட்டதை அடுத்து இத்திருவிழாவிலும் அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடலாம் என்று இங்குள்ள பௌத்த பிக்குகள் அச்சம் கொண்டுள்ளனராம், இதனையடுத்து மிகிந்தலையில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன, -ரி

## மட்டு-அம்பாறைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டக்களப்பு மாவட்டத்தில், இதுவரை 600 ஹெக்டயர் காடுகள் வரை படையினரால் அழிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது

காடுகளை அழிக்கும் நடவடிக்கையில் மாணவர்களும், இளைஞர்களும், யுவதிகளும் படையினரால் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

காடுகளில் வெட்டப்பட்ட மரக்குற்றிகளைக் கொண்டு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

படைக் குவிப்பு அதிகமானால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கன்னன்குடா, ஆயித்தியமலை. கொக்கட்டிச்சோலை, உன்னிச்சை, இலுப்பையடிச்சேனை போன்ற கிராமங்களில் உள்ள பாடசாலைகள், மூடப்படவேண்டிய நிலை ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது. ரி

## 65 லட்சம்ரூபா நகைகளுடன் வங்கி அதிகாரி தலைமறைவு

(கொழும்பு)

பலாங்கொடை பிராந்தியக் கிராம அபிவிருத்தி வங்கியின் அதிகாரி ஒருவர், வங்கியின் பெட்டகத்தில் இருந்த 65 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளுடன் தலைமறைவாகி விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வங்கிப் பெட்டகத்தில் 87 லட்சம் ரூபா மதிப்புள்ள தங்க நகைகள் இருந்தன. இதில் 65 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் காணாமற் போய்விட்டன.

இந்த வங்கி அதிகாரி மேற்குறிப்பிட்ட நகைகளுடன் வெளிநாடு சென்றிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. ரி

## கோட்டை ரயில் நிலையத்தில் தமிழ் இளைஞர்கள்மீது பொலிஸார் கெடுபிடி

(கொழும்பு)

கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்தில் வந்திறங்கும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் அங்கு வைத்துப் பொலிஸாரின் கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்படுவதாகத தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு வார காலத்தில் மட்டும் கொழும்பு கோட்டைப் புகைபிரத நிலையத்தில் வைத்து 15க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு, மலையகப் பகுதிகளில் இருந்து ரயில்களில் வரும் தமிழர்களே பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டு வருகின்றனர் கி-ரி


வெளிவந்துவிட்டது! விற்பனையாகின்றது!

புதிய பாடத்திட்ட ஆண்டு -5

புலமைப் பரிசில் தேர்வுக்கு இரு விநாத்தாள்களுக்கும்ஆயத்தம்செய்யஉகந்த

பொது விவேகம்

பொது அறிவு

ஆக்கம்: சு. வே.

வெளியீடு;

சிறி சுப்பிரமணிய

பொத்தகக் களஞ்சியம்

235, காங்கேசன்துறை சாலை

யாழ்ப்பாணம் [எ 4996

சோதிடம்

வெளிநாட்டு – உள்நாட்டு

ஜாதகக் குறிப்புக்கள் கணித்து எழுதி கொடுக்கப்படும்

மற்றும்

சுகர் நாடி ஜோதிட முறைப்படி பலாபலன்கள் கூறப்படும்

"லக்ஷ்மி நாராயண"

426, காங்கேசன்துறை வீதி,

[சிவன்கோவிலடி)

யாழ்ப்பாணம் சி-1516



யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர்களுக்கு

ஓர் அன்பான வேண்டுகோள்

12-06-95 இல் எமது செயற்குழு உறுப்பினர்கள் தமிழீழ அரசியல் பொறுப்பாளருடனும், தமிழீழ நிர்வாக சேவையுடனும் கலந்துரையாடிய போது வெதுப்பியின் விலையை இன்னும் மூன்று தினங்களில் மறுபரிசிலனை செய்வதாக உறுதியளிக்கப் படடது.

ஆகவே தயவுசெய்து 12-06-95 இல் அறிக்கை விட்டது போன்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

த. சிவசுப்பிரமணியம்

மாவட்ட தலைவர்

(ஏ-4997)



கோண்டாவில் தில்லையம்பதியில்



(இன்று)

பூங்காவனத் திருவிழா

பரந்தெழுந்த சமன் முதலாம்
பரசமய விருண் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றி னொளி விளங்க
அரந்தை கெடப் புகலியர்
கோனமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாமசுந்தரி
பூங்கழல் போற்றி

(எ-4971)

யாழ்ப்பாணம்
நல்லூர் இளநூலகம்.

### மணிவாக்கு

அறிவை வெளிக் காட்டுவதற்குச் சமமான ஒரு காவியம் இருக்குமானால் அதற்குப் பெயரே மௌனம்;

— லியான் ஹாரிஸ்.

## நமது நோக்கு

### அனுராவின் ஆதங்கம்

நாடாளுமன்றத்தில் அவசரகால நீடிப்பு மசோதாவை ஐ. தே. க. சார்பில் எதிர்த்து விவாதத்தை ஆரம்பித்து வைத்த தமது உரையில் அனுரா பண்டாரநாயக்கா இலங்கையில் எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கவேண்டும்? எந்தத் தலைவர் உயிரோடு இருக்கவேண்டும்? யாரை இறக்கவேண்டுமென்பதையெல்லாம் தீர்மானிப்பது கொழும்பில் இருந்து 250 மைல் தூரத்தில் இருக்கும் விடுதலைப் புலிகளே என்று ஆதங்கப்படுகிறார்.

சுதந்திரமாக சமத்துவமாக வாழ்ந்த தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்தது, அவர்களை அவர்களது பரம்பரை நிலங்களிலிருந்து விரட்டியடித்தது. தமிழர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக்கியதெல்லாம் தென் இலங்கையில் உள்ள சிங்கள உயர்குளாத்தவர்கள் தான் என்பதை சற்றும் சிந்திக்கத் தவறிவிட்டார் அனுரா. அவர்கள்தான் தமிழர்களின் தலைவிதியை நிர்ணயித்து இன்றைய நிலைக்கு தள்ளிவைத்தார்கள்.

டி. எஸ் சேனநாயக்கா தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் குடியேற்றங்களை உருவாக்கினார். அனுராவின் தந்தை பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தை கொண்டுவந்ததன் மூலம் தமிழர்களின் மொழி உரிமையைப் பறித்தார்.

தமிழர்களுக்கெதிரான இந்த அநியாயங்களை எல்லாம் செய்தது விடுதலைப் புலிகளா? இல்லை. மாறி மாறி வந்த சிங்களத் தலைமைகளே இவற்றைச் செய்தன இவற்றையெல்லாம் அனுரா மறந்துவிட்டார்.

அவர் தனது 18 வருட பாராளுமன்ற அனுபவத்தைப் பற்றி பேசுகிறார். இக்காலத்தில் அவர் சாதித்ததுதான் என்ன?

சுதந்திரக் கட்சிக்கு தோல்விக்கு மேல் தோல்விகளைப் பெற்றுக்கொடுத்ததுதான் அவரது பெருமை;

எடுக்கும் முடிவுகள் எல்லாவற்றையும் பிழையாக எடுப்பதில் புலியான அனுரா சமீபகாலத்தில் தாயின் சொற்படி அஞ்ஞாதவாசம் செய்தார். தனக்கு சுதந்திரக்கட்சியில் மூன்றாவது இடமாவது கிடைக்குமா என்று ஏங்கியிருந்தார். அதற்காக சிலகாலம் மௌனமாகவும் இருந்தார். எங்கோ ஏதோ பிழைத்து விட்டதால் பழையபடி குட்டையை குழப்புவதற்கு தொடங்கிவிட்டார் போல் தெரிகிறது;

# தமிழர்களிடம் பணம் பறித்து வந்த ஐந்து பொலிஸ் அதிகாரிகள் கைது!

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் கைது செய்யப்படும் தமிழர்களிடம் பெருமளவு பணத்தை 'கறந்து' வந்த ஐந்து பொலிஸ் அதிகாரிகள் இரகசிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

விடுதலைப்புலிகள் என கூறி பெருமளவு தமிழர்களை கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்து அவர்களை விடுதலை செய்வதற்காக பெருமளவு பணத்தை அறவிட்டு வந்ததாக மூன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் இரு சார்ஜன்களும் இரகசிய பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

கைதாகும் தமிழர்களை விடுவிக்கவும் அப்பாவி தமிழர்களை புலிகள் எனக்கூறி பெருமளவு பணம் பறித்து வருவதாகவும் படையினருக்கு எதிராக பல புகார்கள் தெரிவிக்கப்பட்டு வந்தது. இதையடுத்து இரகசிய பொலிஸார் நடாத்திய தீவிர விசாரணைகளின் போத இந்த ஐந்து பொலிஸ் அதிகாரிகளும் பெருமளவு பணம் பறித்துள்ள சம்பவங்கள் வெளியில் தெரிய வந்தது இதையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தற்போதும் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பெருமளவு தமிழர் கைது செய்யப்படுவதும் அவர்களின் விடுதலைக்கு படையினர் பெருமளவு பணத்தை அறவிட்டு வருவதும் தெரிந்ததே. படையினரின் இந்நடவடிக்கை அரசுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## யாழ். குடாநாட்டில் கண்நோய் பரவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் கண்நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது.

தற்போதைய கடும்காற்று, வெப்பம் ஆகியவற்றினாலேயே கண்நோய் வேகமாகப் பரவி வருகின்றது.

கண்நோயினால் பாதிக்கப்பட்ட பலர் தினமும் யாழ். போதனாவைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்

(170-சி)

# இரசாயன ஆயுதங்களைசந்திக்க படையினர் தயாராயுள்ளனராம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்த முனையில் விடுதலைப்புலிகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தினால் அதனை எதர்கொள்ள படையினர் தயாராயிருப்பதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; விடுதலைப்புலிகள் இவ்வாறான ஆயுதங்களை பயன்படுத்த மாட்டார்கள் எனக்கூறமுடியாது அவர்கள் இதுபோன்ற பல ஆயுதங்களையும் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

நாங்கள் இவ்வாறான ஆயுதங்களின் தாக்குதல்களை எதிர்கொள்வதுடன் இதற்கான தடுப்பு பயிற்சியையும் பெற்றிருக்கவேண்டும், எந்தவித ஆயுதங்களையும் குறிப்பாக இரசாயன ஆயுத தாக்குதலையும் முறியடிக்க பயிற்சி பெறவேண்டியது அவசியம் என்றார்

இத்தவேளை இரசாயன ஆயுதங்களை புலிகள் பயன்படுத்தினால் அதிலிருந்து தப்புவதற்காகவும் எதிர்தாக்குதலை நடாத்துவதற்காகவும் படையினர் 10,000 இரசாயன ஆயுத எதிர்ப்பு வாயு முகமூடிகளை பெறறிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. - சி

## இராசி பலன்

13-06-1995

செவ்வாய்க்கிழமை

[தமிழுக்கு வைகாசி-30]

பூரணை மு. ப. 9-59 வரை; கேட்டை பி. ப 1-39 வரை சித்தாமிர்தயோகம், இராகு காலம் பி. ப. 2-52 முதல் 4-22 வரை. சுபவேளை காலை 10-22 முதல் 11-52 வரை.

மேடம்: மதியவர் சிந்தனை, தொழில் கஷ்டம், வெறுப்பு.

இடபம்: இனசன உறவு. சுபகாரியம், மனமகிழ்ச்சி.

மிதுனம்: தாயார் அறிவுரை, காரியசித்தி, பயண நன்மை.

கடகம்: பிறர்துன்பம், கண்டிப்பு, வேலைக் கஷ்டம்.

சிங்கம்: மாமனார் பகை, அமைதியின்மை, அலைச்சல்;

கன்னி: சபலபுத்தி, குடும்ப நன்மை, தொழில் லாபம்.

துலாம்: அதிகாரிகள்சினம், பணமுடை, அவப்பெயர்.

விருச்சிகம்: நினைத்தது கைகூடல், பொதுப்பணி, சயனசுகம்.

தனுசு: வேண்டாத பரிந்துரை. காரியதடை, முன்கோபம்.

மகரம்: உறவினர் உதவி, சுபச்செய்தி, வாக்குவன்மை;

கும்பம்: பெரியார் ஆசி. மனத்தியானம், புதிய பதவி.

மீனம்: வம்பளத்தல், தைரியக் குறைவு, தொழில் பகை.

— ஜோஸ்யர்

# மலையகத்திலும் புலிகள் விரைவில் தாக்குதல் தொடுப்பர்

(கொழும்பு)

மலையக பகுதியிலிருந்தும் விரைவில் விடுதலைப் புலிகள் அரசுக்கு எதிரான தாக்குதல்களைத் தொடுப்பார்களென 'ஜனஜெய' என்ற சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: மலையகததில் புலிகளின் ஊடுருவல் பெருமளவில் அதிகரித்துவிட்டது. இங்கு புலிகளுக்கு பெரும் ஆதரவு கிடைத்து வருகிறது. புலிகள் மலையக இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்குவதுடன் தமது உறுப்பினர்களையும் மலையகத்தினுள் ஊடுருவ வைத்துள்ளனர்.

மலையகத்தில் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான தாக்குதல்களை தொடுப்பதுடன் அங்கிருந்தே புலிகள் மதற்கிலும் தாக்குதல்களை பாரிய அளவில் நடாத்த திட்டமிட்டுள்ளனர். அண்மைக் காலமாக மலையக பகுதியிலிருந்து காணமல்போன பல இளைஞர்கள் தற்போது ஆயுதங்களுடன் நடமாடுவதாக அங்குள்ளோர் கூறுகின்றனர்; இவர்கள் வடபகுதியில் புலிகளிடம் பயிற்சிபெற்று திரும்பியுள்ளனர்.

இந்நிலையில் புலிகள் வடக்கு கிழக்கு - மலையகம் ஆகிய மூன்று பகுதியிலுமிருந்து பலத்த தாக்குதல்களை தொடுப்பார்களேயானால் அரசபடைகளால் தாக்குப்பிடிக்கமுடியாது போய்விடும் எனவும் கூறியுள்ளது. சி

# தெற்காசிய நாட்டவர் 300 பேர் லண்டனில் பெரும் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

பிரிட்டனின் மேற்கு யோக்சயரில் பிறட்போர்ட் நகரில் தொடர்ந்து இரண்டாவது இரவு நேற்றுமுன்தினமும் கலகம் ஏற்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை தெற்காசிய இளைஞன் ஒருவரின் பாதம்மீது பொலிஸ் ரோந்து கார் ஏறியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சுமார் 300 க்கு மேற்பட்ட தெற்காசிய இளைஞர்களால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடாகி இருந்தது, ஆர்பபாட்டத்தைக் கலைக்க பொலிசார் கண்ணீர்புகைக் குண்டுகள் வீசியதில் கலகம் வெடித்தது.

அங்கு நின்ற 100 க்கு மேற்பட்ட பொலிசார்மீது ஆத்திரம் கொண்ட இளைஞர்கள் பெற்றோல் குண்டுகளையும், செங்கற்களையும் வீசினார்கள். ஏற்கனவே பொலிசார்மீது கோபமாக இருந்த இளைஞர்கள் இச்சம்பவத்தால் ஆத்திரமடைந்து மூர்க்கத்தனமாக கடைகள் மீதும் கார்கள் மீதும் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தினர்.

கடைகளின் யன்னல்கள் உடைத்துநொருக்கப்பட்டன. பல கடைகள் சூறையாடப்பட்டன. 7 வாகனங்கள் தீ வைத்து கொழுத்தப்பட்டன. அஞ்சல் நிலையமொன்றும் சேதமாகியது.

இச்சம்பவத்தில் 3 பொலிசார் காயமடைந்தனர். இருவர் கைதாகினர். கே சி

# எய்ட்ஸ் நோயாளிகள் ஜோடி சேர்ப்பு

(மியூனிச்)

எய்ட்ஸ் ஆட்கொல்லி நோய்க்கிருமிகளான எச்.ஐ.வி வைரஸ்களால் பிடிக்கப்பட்ட இருபாலாரிலும் பொருத்தமானவர்களை ஜோடி சேர்த்து விடுவதற்கென ஜேர்மனியில் ஒரு நிறுவனம் இயங்கிவருகிறது.

எயிட்ஸ் நோயாளிகளை இணைத்து அந்த ஜோடிகள் மற்றவர்கள் போலவே சாதாரண இல்வாழ்வை நடத்துவதற்கு அந்த நிறுவனம் உதவ முன்வருகிறது.

'பிவி டேற்றிங் ஏஜென்ஸி' என்ற நிறுவனமே ஐரோப்பாவில் முதல் முறையாக இவ்வகை ஜோடிசேர்ப்பில் ஈடுபட்டிருக்கிறது

ஆரோக்கியமான மக்கள் இந்நோயாளிகளை கருத்திற்கொள்வதே இல்லை. இதனால் தாங்களும் ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடி இல்வாழ்வு நடத்தலாம் என்று அவர்களின் நோக்கம் ஈடேறாமல் போகிறது. அவர்களது மனக்குறையைப் போக்கவே தாம் இவ்வாறு சேவைசெய்ய முயல்வதாக இந்நிறுவனத்தின் ஸ்தாபகரான ஸ்டெவான் வெஹ்னர் தெரிவித்துள்ளார். தீ-சி

## பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ், பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சாதகமான நிலவர அறிக்கையை யடுத்து விரைவில் யாழ், பிரதேச பயிற்சிநிலையத்தில் பொதுசுகாதார பரிசோதகர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(154)

## பலதும் பத்தும்

### நாடி பார்த்தல்

எமது தலைசிறந்த மருத்துவர்கள், கீழைத்தேச மருத்துவ முறைப்படி பல நோய்களை நாடி பார்த்தே தீர்மானித்து வந்தார்கள். ஆட்காட்டி விரலின் அடியில் அழுத்திப் பார்க்கும போது கோழி நடப்பதைப் போல நாடி இருக்குமாம். இது வாத நாடி.

தவளைபோல தவ்வித் தவ்வி நடக்கும் நாடி பித்த நாடி. மோதிர விரலின் கீழே பாம்பைப் போல் ஊர்ந்து செல்வது சிலேத்தும நாடி.

இந்த மூன்று நாடிகளையும் அறிந்து வாதநாடி ஒரு மாத்திரையும், பித்த நாடி அரை மாத்திரையும், சிலேத்தும நாடி கால் மாத்திரையும் இருந்தால் நோயில்லை.

பித்தநாடி ஓடாமற் போனாலும், சிலேத்தும நாடி வேகமாக ஓடினாலும் அந்தக் 'கேசுக்கு' (நோயாளிக்கு) கஷ்டகாலம்தான்!

— மயூரன்

# யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருநாள் சிறப்பிதழ் (13-06-1995)

அந்தோனியாரின் ஆசிபெற
★ வாழ்த்துவோர் ★

**ஆ. சாந்தலிங்கம்**
55, புதுவிதி
கொய்யாத்தோட்டம்

**ஜெயசிறி படப்பிடிப்பு கலையகம் (ஸ்ருடியோ)**
189, கொழும்புத்துறை வீதி
பாண்டியன் தாழ்வு

**ஜீவா வெதுப்பகம்**
49, புதுவீதி
கொய்யாத்தோட்டம்

**கணேசா களஞ்சியம்**
74, புங்கன்குளம் வீதி
பாஷையூர்

**லிங்கம் குளிர்களி நிலையம் (கூல்பார்)**
வெலிங்டன் சந்தி
யாழ்ப்பாணம்

## அருள்மழை பொழியும் அந்தோனியார் ஆலயம்



**யாழ்.** குடாநாட்டின் தென்பகுதியில் நெய்தல் நிலப் பகுதியில் அழகே உருவாக கம்பீரமாக தலைநிமிர்ந்து நிற்கும் ஓர் ஆலயம் உண்டென்றால் பாஷையூர் கிராமத்தில் அடியார்க்கும் அண்டியோர்க்கும் ஆதரவு நல்கி அருள்மழை பொழிய எழுந்தருளி இருக்கும் புனித அந்தோனியார் ஆலயமாகும் என்று கூறின் அடங்கியிருப்பதாகக் கூறுகின்றனர். இத்தகு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தபகுதியில் குடியேறிய மக்களின் சமய செறிவுக்கும் ஆன்மீக உயர்விற்கும்சான்றாக அமைக்கப்பட்டதுதான் இப் புனித அந்தோனியாரின் ஆலயமாகும்.

1844ம் ஆண்டு 'ஒறற்றோரியன்' சபையைச் சேர்ந்த அருட்திரு யுவக்கின் கப்ரியேல்

**கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம்**

மிகையாகாது.

இவ்வாலயம் அடியிடப்பட்ட 145வது வருட பூர்த்தியைக் கொண்டாடும் இத்தருணத்தில் மேற்படி ஆலயத்தின் தொடக்க காலத்தை நினைவு கூருவது மிகவும் பொருத்தமானதாகும்.

இப்பதியின் பழமையைக் கூறும் வரலாற்றில் வல்லுனர்கள் பாணனுக்கு பரிசாக வழங்கப்பட்ட யாழ்ப்பாணப் பகுதியில் பாஷையூர்பகுதியும் அடிகளால் இவ்வாலயம் நிறுவப்பட்டது. அதன்பின்பு ஆன்மீக பணிக்காக தன்னை அர்ப்பணம் செய்த கலாநிதி யூலன் ஆண்டகையின் அரும்பாட்டினால் இவ்வாலயம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக முன்னேற்றம் கண்டது. அதனைத் தொடர்ந்து இவ்வூர் மக்களின் புத்தூக்கமும் வாஞ்சையும், உந்தலும் கவிநூறு கூறும் கலைக்கோவி

(5-ம் பக்கம் பார்க் )

## பங்குத் தந்தை ஆசிமொழி

பல்லாயிரக் கணக்கான பக்த கோடிகளுக்கு புதுமை வள்ளலாக அருள்மாரி பொழியும் பாஷையூர் புனித அந்தோனியார் பதியிலே வாழும் இறைமக்களுக்கு இன்று மகிழ்ச்சியான நாள். அனைவரது அகமும் முகமும் மலர்ந்து நிற்கும் வேளையில், பங்குத் தந்தை என்ற வகையில், எனது சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று இவ்வாலயமானது கோடானுகோடி பக்தர்களைக் கொண்டு புனித அந்தோனியார் அருள் வரம்பெற்று பல கோடிக்கணக்கான புதுமைகளைச் செய்து பக்தர்களைத் தன்வசம் இழுத்துக்கொண்டு

**கி. ஜோ. ஜெயக்குமார்**
(பங்குத் தந்தை)

அபயம், ஆறுதல் தேடிவரும் மக்களை அரவணைத்து, தினம் தினம் கண்ணீரும் கம்பலையுமாய் தஞ்சம் தேடிவரும் மக்களுக்கு அருள்வரம் அள்ளிக் கொடுக்கிறார்.

இன மத பேதமின்றி மக்கள் ஒரு குலமாக இறைவனை வழிபட இவ்வாலயம் வருகின்றனர். வழிபாடுகள் அனைத்தும் இறைவனின் வார்த்தையையே மையமாகக் கொண்டு,

[5ம் பக்கம் பார்க்க]

மலர் அமைப்பு:
பா. நந்தகுமார்
[அலுவலக நிருபர்]

**குமார் வெதுப்பகம்**
சென். செபஸ்ரியன் வீதி
பாஷையூர்

அந்தோனியாரின் ஆசிபெற
★ வாழ்த்துவோர் ★

**ந.பாலவிநாயகர்**
கொழும்புத்துறை வீதி
பாண்டியன்தாழ்வு

**நாதன் களஞ்சியம்**
951, வளன்புரம்
பாஷையூர்

**நவீன சிகை அலங்கரிப்பு நிலையம்**
கண்டி வீதி - மாம்பழம் சந்தி
அரியாலை
உரிமையாளர்;
சி. சிவலிங்கம்

**நிவேதினி வெதுப்பகம்**
22, எழிலூர்
கொழும்புத்துறை

**வசீகரன் களஞ்சியம்**
124/1, கொழும்புத்துறை வீதி
கொழும்புத்துறை

நல்லூர் இளநூலகம்.

# எமது மண்ணை நேசித்து பணிசெய்வோர் மிகச் சிலரே

(யாழ்ப்பாணம்)

இன்றைய போராட்ட சூழ்நிலையில் எமது கல்விச் சமூகம் வெளிநாடுகளுக்கு ஓடிச் செல்கிறது. இந்த மண்ணில் இருந்து பயன்பெற்றவர்கள் பலர். ஆனால் பணி செய்பவர்கள் மிகச் சிலரே. இந்தவகையில் திரு. சிவராசா இந்த மண்ணையும் எமது மக்களையும் நேசிக்கும் அதேவேளை இந்த மண்ணுக்கு ஆற்றி வரும் தொண்டு பாராட்டிற்குரியது.

யாழ். இந்துக்கல்லூரி பிரதி அதிபர் செ. சிவராசாவின் சேவைநலம் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகையில் தமிழீழக் கல்விக் கழக உதவிப் பொறுப்பாளர் திரு. க. அருண்மாஸ்ரர் தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. திரு. அருண் மாஸ்ரர் தொடர்ந்து உரையாற்றுகையில்: கல்விச் சேவை என்பது சிறந்த பணியாகும். இந்தவகையில் எமது மத்தியில் இன்று கல்விச் சேவையில் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருப்பவர்களில் திரு. சிவராஜா சிறந்தவராவார்.

யாழ் பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா உரையாற்றுகையில்: திரு சிவராஜா ஈழத்து இலக்கிய உலகில் சிறந்த விளங்குவதுமட்டுமல்லாது நிர்வாக ஆற்றல மிக்கவராகவும் விளங்கினர் என்றார்.

யாழ்,பல்கலைக்கழக கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம், யாழ்ப்பாணக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வ. தாணையா, யாழ், இந்துக் கலலூரி ஆசிரியர் திரு ந சிவகுமாரன் மற்றும் பலரால் வாழ்த்துரைகள் வழங்கப்பட்டன. 162 சி

## அருள்மழை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லாக அமைய வேண்டுமென்ற வேணவாவும் 1911ம்ஆண்டில் அருட்திரு விக்டர் டெலன்டெஸ் அடிகளாரின் முயற்சியால் பூர்த்தியானது.

இக்குரவரைப் பின்தொடர்ந்து இவர் சகோதரர்களான வணபிதா பெனரில்அடிகளார் காண்பவர் யாவரும் வியக்கக் கூடிய அளவு அழகு வாய்ந்ததும் இன்னும் உயிர் கலை குன்றுததுமான பாரிய சிலுவைப் பாதை படங்களை 1918ம் ஆண்டில் பெல்ஜியத்திலிருந்து தருவித்தார். இன்றும் இப் படங்கள் கோவிலை அலங்கரிப்பதைக் காணலாம்.

இதன்பின் வணபிதா பஸ்தியாம்பிள்ளை எடுத்த முயற்சியின் பயனாக உருவானதுதான் இன்று எல்லோரும கண்டு வியப்புறவானுற உயர்ந்து நிற்கும் அழகிய முகப்பாகும்.

தற்போது எமது பங்கு குரவராக கடமையாற்றும் அருட்திரு வணபிதா ஜெயக்குமார் பங்கு மக்கள்சிரித்தால்தாமும் சிரித்து பங்கு மக்கள் அழுதால் அவர்களோடு சேர்ந்து அழுது பங்கு மக்களுடன் சேர்ந்து அவர்கள் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும உழைத்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவது மெச்சப்பட வேண்டிய விடயமாகும்.

## பங்குத் தந்தை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துன்பத்தில் இறைவன் தூர இல்லை, துல்லியமாக ஒவ்வொரு துணுக்கிலும் எம்மோடு இருந்து, எம்முடன் அனைத்தையும் அனுபவித்துக் கொண்டே இருக்கிறுன் என்ற நினைவு, சொல், செயல் அனைத்தும் அவரே. ஆகவே அவர் எம்மோடு வாழும் பொழுது எதற்கும் அஞ்சவேண்டியதே இல்லை. துன்பத்தைக் கண்டு துவண்டுவிட வேண்டியதில்லை. என்றும "நான் உங்களோடு இருப்பேன்" என்ற உறுதிமொழி எமக்கு உறுதியூட்டுகிறது. எனவே இறைவனின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து, உண்மையில் நம் வாழ்வை அமைப்போம்: இந்த உண்மையான வாழ்வு உங்களுக்கு விடுதலையளிக்கும். இதையே என்றும் உங்களுக்கு ஆசிக்கிறேன்.

இறுதியாக இப் பாரிய பணியிலே எனக்குத் துணை நின்ற உள்ளங்களை அன்போடும பண்போடும் நினைவு கூருகின்றேன். முதறகண் எனது பங்குச் சபை உறுப்பினர்கள திருவிழாவுக்கான பல ஆயத்தங்களையும் செய்து, திருவிழாவைச் சிறப்பித்தமைக்கான எனது நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். அடுத்து வழிபாட்டுக் குழுவினர் இந்த வழிபாடுகளைக் கருத்துடன் ஆயத்தம் செய்து, மக்கள் உள்ளங்களை பக்தி பரவசத்தில் ஊக்குவித்தமைக்கு நன்றி நவில்கின்றேன். 9 நாட்களும் மறையுரையாற்றி மக்கள் மனங்களை இறைவன்பால் திருப்பி ஊக்கமளித்த அருட்திரு றெஜினேல்ட் அடிகளாரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றேன். இன்னும் பல்வேறு வழிகளில் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவிய சகல குழுக்களுக்கும் ஆலயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தாராள பண உதவி செய்த அனைவருக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

எமது ஆலயத்தின் வளர்ச்சி நம் பங்கு மக்களின் நல்வாழ்வாக அமைந்திட வாழ்த்தி நிற்கின்றேன்.

# குற்றப் புலனாய்வுப் பிரிவு தலைமையகத்தை இடமாற்றக் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள குற்றப் புலனாய்வுபிரிவு அமைந்துள்ள இடத்தை உடனடியாக இடமாற்றுமாறு அருகிலுள்ள டி.எஸ் சேனநாயக்கா ம.வி. மாணவர்களின் பெற்றோர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றார்கள்.

குற்றப் புலனாய்வு பிரிவுத் தலைமையகம் விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படைத் தாக்குதலுக்கு இலக்காகும் பட்சத்தில அருகிலுள்ள மேற்படி பாடசாலைமாணவர்களுக்கும் உயிராபத்து ஏற்படும் எனக் கூறியே இப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர் மேற்படி கோரிக்கையை விடுத்து வருகின்றனர்.

கொழும்பிலுள்ள படைகளின் தலைமையகங்களுக்கு அருகிலிருக்கும் பொதுஅமைப்புகளும் இவ்வாறன அச்சத்தைத் தெரிவிப்பதுடன் எவ்வேளையிலும் இங்கு தாக்குதல் நடைபெறலாமெனவும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை படைத்தலைமையகங்களின் பாதுகாப்பிற்காக அவை அமைந்துள்ள இடங்களுக்குச் செல்லும் வீதிகளில் படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டு வீதிப்போக்குவரத்தும் கட்டுப்படுத்தப்பட்டு வருவதால் அப்பகுதிகளில் உள்ளோர் கடும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர். -சி

## இன்று

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று 13 திகதி செவ்வாய்க்கிழமை "திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் குருபூசை" விசேட அபிசேகம் பூசை வழிபாட்டுடன் இடம்பெறும். -154

0 0 0

(நெல்லியடி)

வைகாசி விசாகத்தை முன்னிட்டு இன்று 13ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பொங்கல் விழா இடம்பெறும். 160

0 0 0

(வட்டுக்கோட்டை)

ஆனைக்கோட்டை மூத்த நயினா ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய் பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெற்று 26ம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 27ம் திகதி செய்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 28ம் திகதி புதன்கிழமை திருக்கல்யாணத் திருவிழாவும் நடைபெறும். 139-90 71

# இடம்பெயர்ந்த மாணவருக்கு நாளை இலவச வகுப்பு ஆரம்பம்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் உயர்தரவகுப்பு மாணவர்களின் நலன் கருதி இலவச வகுப்பு நாளை 14ம்திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்குப்பகுதியிலிருந்து இராணுவநடவடிக்கைகளினல் இடம் பெயர்ந்து சரவெட்டி, பருத்தித்துறை போன்ற இடங்களில் அகதிகளாக வசிக்கும் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இங்கு இலவச கல்வி வசதி செயயப்பட்டுள்ளது. 160

# எயிட்ஸ் நோய் பற்றி பாடசாலைமட்டத்தில் நாடகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் 'எயிட்ஸ்' நோய் சம்பந்தமான நாடகம்ஒன்றை பாடசாலை மட்டங்களில் பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

எயிட்ஸ் நோய் எவ்வாறு பரவுகின்றது. அந்த நோயை பரவாமல தடுப்பதற்கான வழிமுறைகள் போன்றவை இந்த நாடகத்தில் ஒருங்கமைத்து காட்டப்படுகின்றது

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரால தயாரிக்கப்பட்ட இந்நாடகம் சில பாடசாலைகளில் தற்போது மேடையேற்றப்பட்டு வருகின்றது. 170-சி

# 300 மலசல கூடங்களை அமைக்கும் முயற்சி தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்றம் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் 300 மலசலகூடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாநகரப் பகுதியில் இந்த மலகூடங்கள் அமைக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்த மலசலகூடம் அமைத்து கொடுக்கப்படும்.

தற்போது மலசலகூடம் அமைப்பதற்கான மூலப்பொருள்கள் இல்லாததால் இத் திட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக மாநகர சுகாதாரப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். -170

# வடமராட்சி கிழக்கில் அகதி முகாம்கள் புனரமைக்க ஏற்பாடு

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள அகதி முகாம்கள் புனரமைக்கப்படவுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளினல் இடம் பெயர்நது இப் பகுதிகளில் முகாம்களில் வசிக்கும் அகதிகளின் நலன் கருதி இப்புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

சுமார் 477 குடிசைகளை போரூட் நிறுவனமும், 133 குடிசைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகமும். தமது செலவில் புனரமைப்புச் செய்யவுள்ளன.

வடமராட்சி போரூட்நிறுவனமும், மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் இதற்கான பண உதவிகளையும், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் மாணவர் அமைப்பு வேண்டிய ஆசிரிய உதவிகளையும் செய்ய முன்வந்துள்ளமை குறிப்பிடததக்கதாகும். -160

## சேவைநலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளர் திரு சி சந்திரசேகரம் இளைப்பாறியுள்ளார்.

இவர் யாழ். அபிவிருத்திச் சபை, நல்லூர் பிரதேசசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் முன்னர் கடமையாற்றியிருந்தார். இவரின் சேவையைப் பாராட்டி ஊர்காவற்றுறை பிரதேசசபை நலன்புரிச் சங்கம் பிரிவுபசாரம் ஒன்றை நடாத்தியது.

## முதலாமிடம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டியில் நவாலி முருகானந்த சனசமூக நிலையம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. -71

## கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் வட்டவை பிரிவில் தமிழீழ விடுதலை புலிகள் கலை, பண்பாட்டு கழகத்தினல் கிராம ரீதியாக வீதி நாடகம், கருத்தரங்கு என்பன நடாத்தப்பட்வருகின்றது. 72

# இன்று சம்பந்தர் குருபூசை மக்கள் மேன்மையுற சம்பந்தர் தேவாரம் உதவும்

பூவுலகு உய்ய வந்தார் என்றும் மண்ணினுக்கு இடுக்கண் தீர வந்தவர் என்றும் புண்ணிய விளைவு போலவார் என்றும் தீதகற்றும் கொள்கையினர் என்றும் அன்புநெறி பெருக்குவித்த ஆண்டகையார் என்றும் திருஞானசம்பந்த சுவாமிகள் பெருமைகளைச் சேக்கிழார் போறறுகின்றார்.

சூழ்ச்சியும் அதிகார வெறியும மிக்க சமணர் அக்காலத்தில் சைவத் தமிழுலகிற்கு கெடுதிகள் புரிந்தனர். அக காலத்தில் தமிழ் மக்கள் மொழி அறிவு சமய ஒழுக்கம் என்பவற்றை இழந்து சமணர் வஞ்சனையால் துன்புற்றனர் இப்படி வருந்திய தமிழ் மக்கள் உய்ய அவதரித்து அருஞ்செயல்புரிந்து மக்கள் மேன்மையுறும்படி திருஞானசம்பந்தர் செயறபட்டார்.

ஊர்கள் தோறும் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று தேவாரம்பாடிப் பணிதலைக கடமையாகக் கொண்டே ஞானசம்பந்தர் தமிழ்மக்களைப் பீடித்த துன்பத்தைப் போக்கினர். மக்கள் தமிழையும் சைவத்தையும் அறியச் செய்தார், அற்புதம் செய்து மக்களை வசப்படுத்த வேண்டும் என்று திருஞானசம்பந்தர் புறப்படவில்லை தேவாரம் பாடித்துதிக்க என்று ஆலயங்களுக்குச் செல்லும்போது சந்தர்ப்பவசமாக நிகழ்ச்சிகள் உண்டாக அந்நிகழ்ச்சிகளை முனனிட்டு சிவபெருமானை வணங்கித் துதித்தார். சிவனருளால் சம்பந்தர் வாழ்வில் பல அற்புதச் செயல்கள் தாமாகவே இடம்பெற்றன,

திருஞானசம்பந்தர் அற்புதங்கள் செய்தமையிலும் பார்க்க தேவாரங்களை பாடி அருளியமையே பெரும்பயனுடையதாகும்.

வேயுறு தோளிபங்கன்— இடரினும் தளரினும் மறையுடையாய்- முதலிய பதிகங்களை தினமும் பாராயணஞ் செய்து பலர் கிரகதோசம்- வறுமை-துன்பம் என்பன நீங்குகின்றார்கள்.

திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு இவரது வாழ்வை ஞாபகப்படுததி இவரது தேவாரத்தை அதிகமாகப்பாடி வணங்குவது இன்று தமிழ்மக்களுக்கு அதிகநன்மை தரும்.

ஒரிருமுறை-ஒரிருநாள் என்றிலாமல் நம் துன்பங்கள் குறையும் வரை சம்பந்தரை வணங்கி அவர் அருளிய தேவாரத்தைப் பாராயணம் செய்யவேண்டும்,

—பண்டிதர்
தி. பொன்னம்பலவாணர்

## பழுதடைந்த தபால்பெட்டி

(மானிப்பாய்)

வண்ணார்பண்ணை தபாலகத்திற்கு முன்பாகவுள்ள பிரதான தபால் பெட்டி பழுதடைந்தமையால் அதற்குள் தபால்களை இட வேண்டாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. 71

## இலவச சீருடைகள்

(கொழும்புத்துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினரால் பராமரிக்கப்பட்டுவரும் பாலர் பாடசாலை சிறுர்களின் நன்மை கருதித் தைக்கப்பட்ட இலவச சீருடைகள் வழங்கப்படவுள்ளது. -154

# முக்கிய கட்சிகள் ஆதரவளித்தால் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

முக்கிய அரசியல் கட்சிகளின் ஒருமித்த ஆதரவு கிடைத்த பின்னரே, இனப் பிரச்னைத் தீர்வுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் பேராசிரியர் ஜி எல்.பீரிஸ் தெரிவித்துள்ளாா.

முக்கிய அரசியல் கட்சிகளின் ஒருமித்த அனுமதி கிடைக்கும்வரை தீர்வத் திட்ட அம்சங்களை அரசு வெளியிடமாட்டாது எனவும் அவர் மேலும் கூறினுர், ஐலன்ட் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முக்கிய அரசியல் கட்சிகளுடன் இவ்விடயம் தொடர்பாக ஆலோசனை செய்தால், தீர்வுத் திட்டத்தின் செயற்பாட்டுத் திறன் குறித்து மதிப்பீடு செய்யமுடியும் எனவும், அதன் பின் இக்கட்சிகளின் ஒருமித்தஆ ரவுடன் நாடாளுமன்றில் தீர்வுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் மேலும கூறியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனதிபதி ஆட்சி முறை ஒழிப்புப் பற்றி வினவப்பட்ட போது, அரசு இது பற்றி உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றது இப்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொள்கையில். இம்முறை நீக்கப்படக் கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் கூறினுர்.

ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் நாடாளுமன்றுமே இக்கால அவகாசத்தைத் தீர்மானிக்கவேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். தீ கி ரி

# புலிகளிடம் ஏவுகணை; இந்தியாவிற்கு ஆபத்து

(புதுடில்லி]

இலங்கையில் விடுதலைப்புலிகள் ஏவுகணைகளைப் பெற்றிருப்பதானது இந்திய எல்லைகளில் ஓர்விளைவை ஏற்படுத்தப்போவது உறுதி என பாரதீய ஜனதாக் கட்சித்தலைவர் முரளி மனோகர் ஜோனி தெரிவித்துள்ளார்,

சென்னையில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: தமிழகத்திலோ அல்லது நாட்டின் எப்பகுதிலுயிமோ வன்முறைகள் இடம் பெறுவதை பாரதிய ஜனதாக்கட்சி எதிர்க்கிறது என்றும் பஞ்சாப் பிரச்னையை காஷ்மீர் தீவிரவாதிகள் பிரச்னையுடன் ஒப்பிடலாகாது என்றும் தெரிவித்தார். க-ரி

# அரசுக்கு எதிராக ஐ.தே.க. நீதிமன்ற நடவடிக்கை

[கொழும்பு)

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களுக்கு ஏற்படுத்தப்படும் தடைகளை நீக்கும் பொருட்டு அரசுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கையை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்திருக்கிறது.

பாராளுமன்ற கட்டிடத்தில் நடைபெற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அரசியலமைப்பின் 13ம் திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு எதிராக மறைமுகமாகவும் நேரடியாகவும் மத்திய அரசும், மாகாண ஆளுநர்களும் நடவடிக்கை எடுத்துவருவதாக ஐ. தே. க. குற்றம சாட்டியிருக்கிறது. கி-ரி

# இலங்கைப்பிரச்னையில்மீண்டும் இந்தியத் தலையீடு ஏற்படும்!

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனை கைதுசெய்து நாடு கடத்துமாறு இந்திய அரசு இலங்கையை கேட்டிருப்பது இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஒரு சிக்கலையே ஏற்படுத்தியுள்ளது என 'சண்டே லீடரில்' அரசியல் ஆய்வாளர் எழுதியுள்ளார்.

சமாதானக் கதவை திறந்தபடி, விடுதலைப்புலிகளை போர் முனையில் நெருக்குதல் கொடுப்பதே அரசின் நோக்கமாக உள்ளது. ஆனல் நாடு கடத்தும் எண்ணததில் அரசு ஒப்புதல் செய்யுமாயின் இலங்கை அரசு எந்த வேளையிலும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கான கதவை மூடிவிட்டதாகவே புலிகள் கருதவாய்ப்புண்டு.

சமாதான பேச்சு நடக்கும் போது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தால், புலிகள் பேச்சுக்கு வந்திருக்க மாட்டார்கள் என்பது சந்திரிகாவுக்கே தெரியும்.

ஆனுல் இப்போது இந்தியாவின் இந்த வேண்டுகோளை பார்க்கும் போது இந்தியா இந்த விடயத்தில் தலையிட திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

இந்தியா. இலங்கையின் உள விவகாரங்களில் தலையீடுவதை ஜனதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் விரும்பவில்லை என்று அவர் "இந்தியா ருடே" பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலிருந்தும் தெரிகிறது.

இதனை ஒரு கணம் சிந்தித்தால், இந்தியா மீண்டும் இந்த மோதலில் ஈடுபடப்போகிறதா என்று யோசிக்க வேண்டியுள்ளது என அந்த அரசியல் விமர்சகர் மேலும் குறிப்பிட்டுள்ளார். கே-ரி

# கைதடியில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கண்காட்சி திருமதி ப. மயில்வாகனம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பி சுந்தரம்பிள்ளையும் சிறப்புவிருந்தினர்களாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. இ. பரராஜசேகரம், கிராம சேவையாளர் திரு. ஜோசப் ரட்ணராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த நாமகள், தமிழினி, தமிழ்ச்செல்வி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் கேக் ஐசிங், பூவேலைகள், தையல் பொருட்கள் உட்பட பல பொருட்கள் கணகாட்சிக்கு வைககப்பட்டன. ரி

# அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரிட்சையில் சித்திபெற்ற மூன்று மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. 170-1

★ யாழ். வைத்தியசாலை

# தொற்று நீக்கும் பிரிவு முற்ருக செயலிழந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலையின் அதிமுக்கிய பிரிவுகளில் ஒன்ருன தொற்று நீக்கும் பிரிவு நேற்று முற்ருகச் செயல் இழந்தது.

தொற்று நீக்கும் இயந்திரம் வேலை செய்துகொண்டிருந்த வேளை மேற்கொள்ளப்பட்ட மின் விநியோக மாற்றமே, ஸ்தம்பித நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரிவில் தொற்று நீக்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்தப் பட்டுவந்த இரண்டு தொற்று நீக்கும் இயந்திரங்களில் ஒன்று கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகச் செயலிழந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது பாவனையிலிருந்த இரண்டாவது தொற்று நீக்கும் இயந்திரமும் பழுதடைந்துவிட்டதால் வைத்தியசாலையின் அத்தியாவசியச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வைத்திய சேவையின் பெரும்பாலான பகுதிகள் பின்னடையும் நிலையை எதிர் நோக்கி உள்ளதாகவும் தெரிய வருகிறது. 90 ரி

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ஹேயல் விளையாட்டுகழகம் உரும்பராய் இந்துக்கல்லூரியில் நடாத்தும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று மாலை 3 போட்டிகள் நடைபெறவுள்ளன.

நாவாந்துறை கலைவாணி எதிர் பன்ளுலை கணேசன், யாழ்.பல்கலைக்கழகம் 'கோல்ட்' எதிர் சுழிபுரம் சத்யா, தெல்லிப்பளை விநாயகர் எதிர் அளவெட்டி விநாயகர் 'பி' மோதுகின்றன. - சி

# காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு 3ம் சட்டையடியில் கடந்த வெள்ளிக்கிழமை வீதிவிபத்துக்குள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை மரணமானுர்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த நித்தியசிவம் கௌரிபாலன் (28 வயது) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவர். 90 ரி

ஊருக்குள் அறியாத முகமென்ருல்
உன்னித்துப் பார் !
அறிந்த முகத்தையும்
அலட்சியம் செய்யாதே !!
வேருக்குட் கறையான் புகுந்தால்,
விழுதுவிட்ட மரமும் விழும்.
வருமுன் காப்போம் !
வருபவனை அளவிடு ! ! !

### கிழக்கில் மீண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை மட்டு.கிரான் இராணுவ முகாம் விடுதலைப புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு பெரும் தாக்குதல் தொடுககப்பட்டது.

இத்தாக்குதலில 18படையினர் கொல்லப்யட்டதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் இறந்தபடையினரின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று பி. பி. ஸி.தெரிவித்தது.

இறந்த படையினரின் சடலங்கள் மட்டு. வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டன.

சிறிய கால இடைவெளிக்குப்பின் கிழக்குமாகாணத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய பெரும் தாக்குதல் இது என்றும் பி பி.ஸி. தெரிவித்தது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகளினுல் பல இராணுவத் தளபாடங்கள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் அது பற்றிய மேலதிக விபரங்கள் கிடைக்கவில்லை

முகாம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து கிரான் பகுதிக்குப் பெரும் தொகையான படையினர் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தீ ரி

### புலிகளின்றி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: தமிழீழ விடுதலைப் புலிகள் வடபகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாலும் தரையில் அவர்கள் ஒரு வலுவான சக்தியாக இருப்பதாலும் பேச்சு வார்த்தைகளில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வது மிக முக்கியம் என நான் கருதுகிறேன்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்த காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை சிறிதளவு தற்போது முற்ருக தகர்க்கப் பட்டுவிட்டதால் இந்த கால கட்டத்தில் புலிகளுடன் பேசுவதென்பது மிக கடினமாக இருக்கும்.

எனவே முன்னைய தடவை போல பூநகரி முகாம்பற்றியும் ஆயுதம் தாங்கிய போராளிகள் சுதந்திரமாக நடமாடுவது. பற்றியும் நிபந்தனைகள் போட்டது போல புலிகள் இம்முறையும் நிபந்தனைகள் போட்டால் பேச்சு வார்த்தைகளை தொடங்குவதென்பதே இயலாத காரியமாக இருக்கும் ஆனுல் முற்ருக நிபந்தனைகள் அற்ற அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஒருதலைப்பட்சமாக மீண்டும் குழப்பப்பட மாட்டாது என்ற உறுதிகள் பாதுகாப்புடன் பேச்சுவார்த்தைகள் தொடங்க கூடியதொரு நிலைமை உருவாக்கப்பட்டால் முன்னேறக் கூடிய வழி இருக்கக் கூடும் என்றும் தெரிவித்தார்

புலிப்படையினரின் நான்கு கோரிக்கைகளையும் ஏற்றுக் கொள்ள நீங்கள் தயராக இருக்கிறீர்களா எனக் கேட்கப்பட்டபோது பூநகரிமுகாம் பற்றியோ ஆயுதப போராளிகள் நடமாடுவது பற்றியோ நாங்கள் நிச்சயம் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்கள் வாங்குவது போலவே நாங்களும் வாங்க எமக்கு உரிமை உண்டு தனே இந்த வகையில் பல நாடுகள் உதவிகள் செய்ய ஒப்புக் கொண்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ரி

### மட்டு மாவடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சத்திலேயே இவ்வாறு குறிப்பிட்ட இராணுவ முகாம் மூடப்பட்டதாக அறியப்படுகிறது.

இம்முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் இலுப்பையடிச்சேனை பாடசாலையில் தற்காலிகமாக தங்கியுள்ளனராம். க-ரி

### சிறிலங்காவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுக்கு தெரியும் விடுதலைப் புலிகளுக்கு எதையும் மறைக்க முடியாது. அவர்களது புலனுய்வின் வளர்ச்சியே சிறிலங்காவின் இராணுவ தோல்விகளுக்கு காரணமாகும்.

அரச படையினர் இராணுவ நடவடிக்கையை திட்டமிடும் போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் விவேகமான மூளையையும் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் சண்டேரைம்ஸ் செய்தியாளர் மேலும் தெரிவித்துள்ளார்- ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் இறைவனதாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.